சித்த மருத்துவத்தில்

# வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும்

மருத்துவர் எஸ். இராசாமணி, பி.ஐ.எம்.,
அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை,
சென்னை - 600 106.

LC:4:6
N88
143261

சித்த மருத்துவ வாரியம்
1988

# சித்த மருத்துவத்தில் வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும்

மருத்துவர் எஸ். இராசாமணி, பி.ஐ.எம்.,
அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை,
சென்னை - 600 106.

தமிழ் நாடு சித்த மருத்துவ வாரியம்
1988

முதல் பதிப்பு : மார்ச்சு 1988

LC:416
N88

விலை : ரூ

143261

அச்சிட்டோர் :
டான்சி அச்சகம், கிண்டி தொழிற் பேட்டை, சென்னை-600 032

**மருத்துவர் கே. வி. வைதீஸ்வரன்,** எம். டி. (சித்தா)
உறுப்பினர் செயலாளர், (பொறுப்பு)
தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் மற்றும்
இயக்குநர், (பொறுப்பு)
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை.

# பதிப்புரை

சித்த மருத்துவ முறையில் வர்ம முறை மருத்துவம் முக்கிய அங்கம் வகிக்கிறது. வர்மம் குறித்த விவரம் அறிந்தோர், போதிக்க வல்லோர் தற்போது மிக்க குறைவே. வர்மமுறை மருத்துவம் மேலும் நசித்து விடாமலும், அழிந்துவிடாமலும் தடுக்க தற்போது வர்ம முறை மருத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. வர்ம முறை தளிர்த்து தழைத்தோங்கவும், புத்துணர்ச்சி பெற்று ஏற்றங்காணவும், மருத்துவர். **எஸ். இராசாமணி** அவர்களால் ஆக்கப்பட்டுள்ள **''சித்த மருத்துவத்தில் வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும்''** எனும் இந்நூல் தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியத்தின் முதல் வர்ம நூலாக அமைகிறது. இந் நூலைத் தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறது.

பல்லாற்றானும் எங்கட்கு துணைநின்று பணிகள் விரைவாக நடந்திட எப்போதும் துணையாக நின்றிடும் இந்திய மருத்துவம மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் மற்றும் அரசு செயலர் திருமிகு அ. **கோ. விஜயபானு** இ.ஆ.ப., அவர்கட்கு எங்கள் மனம் நிறைந்த நன்றி என்றென்றும் உரித்தாகுக.

நூல் நன்முறையில் உருப்பெற்றிட துணைநின்ற வாரியத் தனி அலுவலர் பொறுப்பினை ஏற்று இருக்கும் ஆய்வு மருத்துவ அலுவலர் மருத்துவர். பெ. இராதா கிருஷ்ணன், பி.ஐ.எம்., அவர்கட்கும், விரைந்து பணி முடித்துதவிய தமிழ்ப்புலவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவர்க்கும் இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த டான்சி அச்சகத்தார்க்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றி உரித்தாகட்டும்.

சென்னை-106          ஒப்பம்
நாள்: 5-4-88          **கே. வி. வைதீஸ்வரன்**

# சித்த மருத்துவத்தில் வர்ம பரிகாரமும் சிகிச்சை முறைகளும்

இவ்வ வனியில் மக்களாகிய நாம் காணும் உலகமானது ஐம்பெரும் கண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று ஆசியாக் கண்டம். இக்கண்டத்தின் தென்பகுதியிலே இமயமலைக்குத் தெற்கேயும் இந்து மகா சமுத்திரத்திற்கு வடக்கேயும் அமைந்து காணப்படுவது நம் பரத நாடு. இந்நாட்டின் தென்பகுதியில் காணப் படும் பொதிகமலை, மகேந்திரமலை இவற்றுள் அடங்கும். இங்கே வாழ்ந்து வந்த சித்தர்களில் மாபெரும் சித்தனாகிய சிவபெருமான், மகேந்திரமலையில் நடந்த முதற்சங்கத்தில் இறையனார் என்ற பெயருடன் தலைமை வகித்தார். அச்சங்கத்தில் பங்கு பெற்ற பலருள் அகஸ்திய முனிவரும் ஒருவராவர். அக்காலத்தில் துவக்கப் பட்ட நூல் அகத்திய நூல். இந்நூலானது கி.மு. 3000 த்தில் வெளிவந்துள்ளது. அவை யாவும் ஓலைச் சுவடிகளில் எழுதப் பட்டவையாக காணப்படுகின்றன. அவைகள் யாவும் வெண்பாக் களாகவே எழுதப்பட்டுள்ளன. அவ்வெண்பாக்களில் விளக்கப் பட்டவையே சித்தவைத்திய தமிழ் வைத்தியமாகும். சித்த வைத்தியத்தை தமிழாக்கம் தந்தவர்களே தமிழ் நாட்டு பண்டைச் சித்தர்கள். உண்மைத் தவ நெறியில் பிறழாது உன்னத நிலையில் வாழ்ந்த சித்தர்கள் தங்கள் அருள்ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர். அன்னாரின் கூற்றுக்கள் அனுமானங்கள் அல்ல; மறுக்கமுடியாத அனுபவ உண்மைகள். நாளுக்கு நாள் மாறுபட்டவை அல்ல. நாள் எல்லைக்குள்ளும் நாழிகை வரையறைக்குள்ளும் தீர்க்கக்கூடியவை.

இம்மருத்துவ இயல் தமிழ் மண்ணிற்கேற்பவும் இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்பவும் பல்வேறுபட்ட இயற்கை பொருட்களைக் கொண்டு பிணிகளை நீக்குவதற்கென்று உருவாக்கப் பட்டுள்ளதாகும். ஆயின் எல்லோரும் இதனால் கிடைக்கும் குணத்தினை சுலபமாக பெற்றுக் கொள்ள இயலும். உலகெங்கும் எடுத்துச் செல்லவும் இயலும். இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, பிசின், காய், பழம், வித்து முதலியவைகளைக் கொண்டும், நவரெத்தின நவலோகங்களைக் கொண்டும், ரசம், கந்தகம், காந்தம், கற்பூரம், தாரம், அயம், கிட்டம், பவளம், அன்னபேதி,

துருசு முதலியவைகளைக் கொண்டும், திரிகடுகு, திரிசாதி, திரிபலை அரிசிவகை ஆறு போன்ற பலவகைப்பட்ட அங்காடி மருந்து வகைகளைக் கொண்டும், பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு வகைகளாக வியாதிகளுக்கு ஏற்றவாறு செய்பவைகளைக் கொண்டும், சுத்த தண்ணீர், கடல் தண்ணீர், காடித்தண்ணீர், கடுகுத்தண்ணீர், கதம்பைச்சாறு, முதலிய பல நீர் வகைகளைக் கொண்டும் பால், தேன், சீனி, நெய் முதலியவைகளைக் கொண்டும் தெங்கு, புங்கு, தென்னை, புன்னை, வேம்பு, எள் முதலிய பல தாவர எண்ணெய் வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற மருத்துவ முறையாகும்.

சித்தர்கள் வியாதிகளின் மூல காரணங்களில் கவனம் செலுத்தி அவைகளைப் பல பாகங்களாக விளக்கமாக கூறியுள்ளனர். அவைகளில் 'வர்ம பரிகாரம்' ஒன்றாகும். குமரி மாவட்டத்தில் வாழ்வு பெற்று விளங்கும் இப்பரிகாரம் சித்த மருத்துவத்தில் ஒரு பெரும் பிரிவினைச் சாரும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வந்து பழகியவர்களுக்கு ஆசான், வர்மானி என்ற சொற்கள் புதியவை அல்ல. ஆசான் என்றவுடன் அவர்களுக்கு எழுத்தறிவிக்கும் ஆசிரியர்தான் நினைவிற்கு வர முடியும். வர்மானி என்றால் ஒருவகை ஆணி என்றுகூடத் தோன்றும். சிறிது பழகியபின் தான் இரண்டு சொற்களும் வர்ம பரிகாரம் செய்யும் மருத்துவரைக் குறிக்கும் என அறிவர்.

வர்ம பரிகாரம் என்றால் என்ன? அது வந்த வரலாறு யாது? அவற்றைப் பற்றி அறிய நமக்கு ஆர்வம் உண்டாவது இயற்கையே.

வர்மம் என்றால் என்ன என்பதற்கு முறிவு சாரி என்ற நூல் விடையளிக்கிறது.

''கேளப்பா தடியடிகள் படுதலாலும்
 கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்
வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்
 மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும்
மேலப்பா ஆகாசமதிலே நின்று
 மெய்மறந்து கைமறந்து விடுதலாலும்
தாளப்பா பற்பலவாம் விதத்திலே
 சங்கையில்லாக் காலமது சாருந்தானே''

காலம் என்பதுதான் வர்மம். அதாவது நரம்புகளில் தட்டுதலுற்று உணர்விழப்பதுதான். ஆனால் எல்லா நரம்பு களிலும் தட்டுப்பட்டால் வர்மம் கொள்வதில்லை. குறிப்பிட்ட நரம்பின் எல்லா இடங்களிலும் தட்டுப்பட்டாலும் வர்மம் கொள்வ தில்லை. சுருங்கச் சொன்னால் குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட நேரத்தில் தட்டுப்பட்டால் தான் ஒருவன் உணர்விழப்பான். அவருக்கு வர்மம் அல்லது காயம் கொண்டிருக்கிறது எனக் கூறலாம்.

இன்னும் வர்மத்திற்கு இரகசியம், மர்மம், ஒடிவு, முறிவு, கருவி என்றும், பல நரம்புகள் ஒன்றோடொன்று சேரக்கூடிய இட மென்றும், பேசிகள், நரம்புகள், பொருத்துக்கள், விசிகள், எந் தெந்த இடங்களில் பின்னிப் பிணைந்து காணப்படுகிறதோ, அதுவே வர்மம் என்றும், பிராணன் தங்குமிடமென்றும் சில பேராசிரியர்கள் கூறுகிறார்கள். இந்த வர்ம வித்தையை அறிந்தவர்கள், இதை மிகவும் இரகசியமாகவே போற்றி வருகிறார்கள். காரணம் என்ன? ஒரு வர்ம நூல் பின்வருமாறு கூறுகிறது.

முடுகுவது சண்டாள கோபத்தாலே
கடுகுவது ஆங்காரம் மனத்தில் கொண்டு
கற்றவித்தை மனத்தினால் காலம் எண்ணி
நடுகுவது நல்லோரை பெரியோர் தம்மை
நானிலத்தில் ஏழைகளை நடுங்கச் செய்து
கொடுகவே ஈடு செய்து கொள்வானப்பா
கொடும்பாவம் அவனை வந்து குறுகுந்தானே.

இங்கே ஈடு என்பது வர்மத்தை. வர்ம நூல் வித்தையைக் கையாள்வது எவ்வளவு ஆபத்து நிறைந்தது என்பதை இந்தப் பாட்டு விளக்குகிறது. இந்த வித்தையைக் கற்ற ஆங்காரத்தால் ஒருவன் கோபம் வரும்போது நல்லோரையும், பெரியோரையும், ஏழைகளையும் வர்மம் கொள்ளச் செய்து கொல்வான். அதனால் இதனை இரகசியமாக ‘வை’ என்று எச்சரிக்கிறார் ஆசிரியர். இதிலிருந்து மர்மம் தான் வர்மமாயிற்று என்று விளங்குகின்றது.

இன்னும் இவ்வர்ம நூல்களை மறைத்து வைப்பதற்கு பின்வரும் பாடல் விளக்குகிறது.

“உறவாடி சில பேர்கள் நூல்தானென்று
ஓவியம் போல் மொழி பேசி உன்னை ஏய்ப்பார்
திறமான நூலவர்க்கு வெளிவிடாதே,
சீசனன்று பனிரண்டு வருடம் காத்தால்
அறிவான புத்தியவர்க்கு இருந்ததனால்
அப்பனே பொருள் வாங்கி நூலை ஈயே

ஈவதுதான் ஆளுக்கும் சிவயோகிக்கும்
இகத்திலுள்ள வம்பருக்கு ஈன்றாயானால்
சாவது போல் கடுநரகில் விழுவாய் சொன்னேன்
சண்டாளர்க்கு ஈயாதே தரணி மீது
தாமிதுவே வெளியேற சொன்னோமென்று,
தாரணியில் இந்நூலை மறைத்தார் பாரே.

எனது கோரிக்கை, இந்நூலை யாவரும் கற்றுணர்வதால், பிறருக்குத் திடீரென்று உண்டாகும் நோய், விபத்து போன்றவைகளுக்குத் தைரியமாய் காரணம் கண்டறிந்து சிகிச்சை செய்ய வல்லமையும் பிறரை உபத்தரவிப்பது பாவம் என்றறியவும் அஹிம்சா தர்மத்தைக் கைக்கொள்ளவும், உலகில் யாவர்க்கும் நன்மையே பயக்கும் என்பது எனது துணிபு.

அங்காதி பாதத்தில் ஒரு மனிதனுக்குத் திடீரென்று அடிபடுவதினாலோ, அல்லது எதிரிகள் தாக்குவதாலோ, எதிர்பாராத விபத்துக்களினாலோ, இன்னும் பிறவும் போன்ற காரணங்களினால் என்புகள் ஒடிதல், மயக்கமுறுதல், நரம்புகள் பாதிப்பு, மூட்டுக்கள் நழுவுதல், உள்ளுறுப்புக்கள் பாதிக்கப்படுதல் உடம்பிலுள்ள வர்ம இடங்கள் கேடடைந்து உயிர் போகும் நிலைகளும் இதில் விளக்கப் பட்டுள்ளது. வர்ம வித்தை வந்த வரலாறு யாது? அகஸ்தியர், போகர் முதலிய முனிவர்கள் இந்த நூல்களை எழுதினார்கள் என்பது மரபு. முனிவர்களும், சித்தர்களும், தங்கள் உள்ளொளியாலும், அனுபவத்தாலும், கண்ட உண்மைகள் உபதேசமாக உரைக்கப்பட்டு வழிவழியாக வந்து பின் ஏட்டு ரூபம் அடைந்திருக்க வேண்டும். இதனால்தானே தமிழ் வைத்தியத்தை நாம் சித்த வைத்தியம் என்கிறோம். இந்த வித்தையை இன்று கையாளும் மக்களின் முன்னோர் போர் வீரர்களாகத் தான் இருந்திருக்க வேண்டும். அவர்கள்தானே வர்மம் கொள்ளச் செய்வார்கள். கன்னியாகுமரி மக்களுக்கு மாத்திரம் இந்த வரம் கிடைக்க காரணம் இன்னும் புரியாத மர்மமாகவே உள்ளது.

வர்மம் எத்தனை வகைப்படும் என்பதை

1. படு வர்மம் — 12 (Varmam due to Violent injury)

2. தொடு வர்மம் — 96 (Varmam due to touch)

3. தட்டு வர்மம் — 8 (Varmam due to blow)

4. தடவு வர்மம் — 4 (Varmam due to Massage)

5. நக்கு வர்மம் — 1 (Varmam due to licking)

6. நோக்கு வர்மம் — 1 (Varmam due to sight)


ஆனால் தற்போது நடைமுறையில் எடுத்துக்கொள்வது 108 வர்மமாகும். ஆண்களுக்கு 108 வர்மங்களும் பெண்களுக்கு பீடைக் காலம் நீங்கலாக 107 வர்மங்களும் உள்ளன. மேலும் நம் உடலில் 150 முக்கியமான வர்மங்கள் படத்துடன் விளக்கப்பட்டுள்ளன.

படுவர்மம் என்பது குறிப்பிட்ட சில ஸ்தானங்களில் அடிபட்டு முறிவுண்டு சாதல், முறிவில்லையாயின் உணர்விழத்தல் ஆகும். இதற்கு உதாரணம் திலர்த வர்மம்.


பொதுவாக சாத்தியமான வர்மங்களைத் தொடுவர்மம் என்று கூறுவார்கள் 'மணிபந்தகம்' என்ற வர்மம் இதிலடங்கும். இதன் குறி குணங்கள் பின் வருமாறு.

> ''உடல் களைப்பும் சுரமும், குளிருமுண்டாகும்
> பையவே மேவிவரும் சொறியும் வீக்கம்
> பலவாகப் பெலந்தனையும் செய்விக்காது,''

இது சாத்திய மானது. சுகம் கிடைக்கக் கூடியது.




1. திலர்த வர்மம்
2. கண்ணாடி கால வர்மம்
3. மூர்த்திக் கால வர்மம்
4. அந்தம் வர்மம்
5. தும்மிக் கால வர்மம்
6. பின் சுவாதி வர்மம்
7. கும்பிடு கால வர்மம்
8. நட்சத்திர கால வர்மம்
9. பால வர்மம்
10. மேல் காடி வர்மம்




11. முன் சுவாதி வர்மம்

12. நெம வர்மம்

13. மந்திரக் கால வர்மம்

14. பின் வட்டிக் கால வர்மம்

15. காம்பூதி கால வர்மம்


16. உள் நாக்கு கால வர்மம்

17. ஒட்டு வர்மம்

18. சென்னி வர்மம்

19. பொய்கைக் காலம்

20. அலவாடி வர்மம்




21. மூக்கடைக்கி கால வர்மம்

22. கும்பேரிக் கால வர்மம்

23. நாசிக்கால வர்மம்

24. வெட்டு வர்மம்

25. அண்ணாங்கால மர்மம்

26. உறக்க கால வர்மம்


27. கொக்கி வர்மம்

28. சங்குதிரி கால வர்மம்

29. செவிகுத்திக் கால வர்மம்

30. கொம்பு


31. சுமைக்கால வர்மம்




32. தலைப்பாகை வர்மம்

33. பூட்டெல்லு வர்மம்


37. மூர்த்தி அடக்க வர்மம்




34. பிடரி கால வர்மம்

35. பொரச்சை வர்மம்

36. சரிதி வர்மம்




38. தள்ளல் நடு குழி வர்மம்

39. திவளைக் கால வர்மம்

40. கைபுஜ 3வது வரி வர்மம்


41. சுழி ஆடி வர்மம்

42. அடப்பக் கால வர்மம்

43. முண்டெல்லு வர்மம்

44. பெரிய அஸ்தி சுருக்கி வர்மம்


45. சிறிய அஸ்தி சுருக்கி வர்மம்




46. லிங்க வர்மம்

47. அண்ட காலம் வர்மம்

48. தாலிக வர்மம்




38. தள்ளல் நடு குழி வர்மம்

39. திவளை கால வர்மம்

40. கைபுஜ மூன்றாவது வரி வர்மம்

42. அடப்ப கால வர்மம்


49. ஆனந்த வாசு கால வர்மம்

54. கதிர் வர்மம்

55. கதிர் காம வர்மம்

56. கூம்பு வர்மம்

64. ஹனுமார் வர்மம்




49. ஆனந்த வாசு கால வர்மம்

50. உதிரக்கால வர்மம்

51. பள்ளை வர்மம்

52. மூத்திரக் கால வர்மம்

53. குத்து வர்மம்

54. கதிர் வர்மம்

55. கதிர் காம வர்மம்

56. கூம்பு வர்மம்

57. நேர் வர்மம்

58. உறுமிக் கால் வர்மம்

59. ஆமென்ற வர்மம்


60. தண்டு வர்மம்

61. கல்லடைக்கால் மர்மம்

62. காக்கட்டை கால வர்மம்

63. புஜ வர்மம்

64. விதனுமான் வர்மம்




65. மேல் சுருதி வர்மம்

66. கைக்குழி காந்தாரி வர்மம்

67. மேல்கைப்பூட்டு வர்மம்

68. கைச் சிப்பு என்பு வர்மம்

69. பூனூலு கால வர்மம்


70. வெல்லுறுமி தல்லுறுமி வர்மம்

71. கச்சை வர்மம்

72. கூச்சபிரம் வர்மம்

73. சங்குதிரி கால வர்மம்

74. வலம்புரி இடம்புரி வர்மம்




74. வலம்புரி இடம்புரி வர்மம்

75. தல்லை அடக்க வர்மம்

76. துதிக்கை வர்மம்

77. தட்சணக் கால வர்மம்


78. சுழுக்கு வர்மம்

79. முட்டு வர்மம்

80. மொளியின் வர்மம்

81. கைகுசத்திட வர்மம்

82. உள்ளங்கை வெள்ளை வர்மம்




83. தொங்கு சதை வர்மம்

84. மணி பந்த வர்மம்

85. சுண்டோதரி வர்மம்


86. நடுக்கவளி வர்மம்

87. சுறுவிரல் கவளி வர்மம்


88. மேல் மணிக்கட்டு வர்மம்

89. விஷ மணிபந்த வர்மம்

90. கவளி கால வர்மம்




| | | | |
|---|---|---|---|
| 91. | மூத்திரக் காலம் | 101. | நாய்த் தலை வர்மம் |
| 92. | பதக்களை வர்மம் | 102. | குதிரைமுக வர்மம் |
| 93. | ஆமைக்கால வர்மம் | 103. | கும்பேறி வர்மம் |
| 94. | பக்க வர்மம் | 104. | கண்ணு வர்மம் |
| 95. | குழச்சி வர்மம் | 105. | கோணச்சன்னிவர்மம் |
| 96. | முடிச்சி வர்மம் | 106. | அடக்க கால வர்மம் |
| 97. | சிறுவிரல் கவளி வர்மம் | 107. | திட வர்மம் |
| 98. | சிரட்டை வர்மம் | 108. | கண்புகழ் கால வர்மம் |
| 99. | கால் மூட்டு வர்மம் | 109. | பூமிக்கால வர்மம் |
| 100. | கால் கண்ணு வர்மம் | | |




110. இடுப்பு வர்மம்

111. கிழிமேக வர்மம்

112. இழிப்பிறை வர்மம்

113. அணி வர்மம்

114. கோச்சு வர்மம்

115. முடக்கு வர்மம்

116. குளிர்ச்சை வர்மம்

117. குசத்திட வர்மம்


118. உப்புகுத்தி வர்மம்

119. பாதச்சக்கர வர்மம்

120. கீழ் சுழி வர்மம்

121. பதக்கல் வர்மம்

122. முண்டக வர்மம்




1. மேல் சுரிதி வர்மம்
2. மேலாக கால வர்மம்
3. கீழாக கால வர்மம்
4. நட்டெல்லு வர்மம்
5. மேல் அண்ட வர்மம்
6. நாய் இருப்பு வர்மம்
7. கீழ் அண்ட வர்மம்
8. குத்திக் கால வர்மம்

தட்டு வர்மம் எப்போதுமே அசாத்தியமானது. இடுப்பிற்கு முண்டெலும்புக்கு கீழே முறிந்தால் சாகும். இது தட்டு வர்மத்திற்கு உதாரணம்.

என்ன வர்மம் கொண்டதென்று அறிவதற்கு குறி குணங்களும், நாடியும் துணை செய்கின்றன. குறிகள் மாறுந்தோறும் நாடியும் வேறுபடும்.

வர்மங்களுக்கு பரிகாரம் உண்டு. பல வர்மங்களுக்கும் பொதுவான 'அடங்கல்' (Plexus) என்னும் பரிகாரமும் உண்டு. பரிகாரத்திற்கு முக்கியமானது 'வர்ம மசாஜ்' அல்லது இளக்குமுறை. வர்ம திறவுகோல் என்ற நூலில் வர்மம் கொண்டவரை தரையில் கால்மடக்கி நிமிர்த்தி இருக்கச்செய்து, பதமாக உச்சியில் 3 தடவை தட்டி சிரசதனை முன்பின் அசைத்து திருகி, நரம்பெல்லாம் தடவி பின்னி மார்போடணைத்து தூக்கி உதறிவிட உணர்வு பெற்று விடுவார். இது பொது இளக்குமுறை.

இரண்டாவது பரிகாரம், மருந்து, எண்ணெய், ஒற்றடம், நெய், பொடி, மாத்திரை, நசியம் என்னும் பலவகைப்படும். சிலவேளைகளில் தண்ணீரே மருந்தாவதும் உண்டு.

மேலும் வர்மத்தில் உள்ளுறுப்புகளாகக் காணப்படும் புப்புசம், (Lungs) தமரகம் (Heart வெளியுறுப்புகளாகிய பொருத்துக்கள், எலும்புகளில் ஒடிவு முறிவுகள் காணப்பட்டாலோ, அந்தந்த இடங்களை விட்டு நழுவி காணப்பட்டாலோ, அசாத்திய குறி குணங்கள் காணப்படும்.

''பஞ்சவர்ண குகை நெருங்கி ஈரலென்ற
குகையற்று இசங்கி போனால்
நன்னெனவே எழுந்திருப்பான் தஞ்சாரத்தால்
நடுநடுங்கி பித்தம் போல் பெருமை பேசும்
கண்டிடவே வர்ம மில்லை என்றும்,
சொல்வார் காசினியிலுள்ளோர்கள்
கருத்தாக பதினெட்டு நாழிகைக்குள்
மரணமென்று பிரித்துச் சொல்லே

என்ற பாடலிலிருந்து நன்கு உணரலாம். இந்த வர்மம் ஏற்பட்டால் வெளிப்பார்வைக்குத் தெரியாது. ஆனால் ஏற்பட்ட விதம், அதன் அறிகுறிகள், நாடி நிலை இவைகளை கணிக்காமல் சாத்திய அசாத்திய நிலைகளைக் கூறமுடியாது. ஏற்பட்ட விதம்

மாத்திரைக்கு அதிகப்பட்டு வதை காயமாக இருந்தால் 18 நாழிகைக்குள் மரணம் உண்டாகும் என்று தெரிகிறது. வெளி யுறுப்புக்களில் ஏற்படும் முறிவு, பொருத்து, விலகல், நெரிசல், முதலியவற்றால் விளையும் விபரீதத்தையும் அதை நிவர்த்தி செய்யும் முறைகளையும் வர்ம நூல்கள் எடுத்துரைக்கின்றன.

வர்மம் சரியான முறையில் பழகிக் கொண்டால் எலும்பு முறிவுகளைச் சரி செய்ய முடியும்.

எலும்பு முறிவுக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு.

1. உபகாரணங்கள் : (Predisposing Cause)

2. நேர் காரணம் : (Exciting Cause).

**உபகாரணங்கள்**

சிறு குழந்தைகள் தவறி விழுவதால் எலும்பு முறிவு ஏற்படுவது இயற்கை. குழந்தைகளுக்கு எலும்பின் அந்தங்கள் முற்றுப் பெறாத குருத்தெலும்பு (Epiphysis) ஆக இருக்கும். இளம் பருவத்தில் எலும்பு முறிவு என்றால் எலும்பு முனைப்பிரிவு (Separation of Epiphysis) என்றே சொல்லவேண்டும்.

**நேர் காரணம்**

பலாத்காரத்தினாலும் நேரடியாக தாக்குதல் விபத்துக் களினால் உயரமான இடங்களிலிருந்து விழுவதாலும் எலும்பு முறிவு எனப்படும்.

**முறிவின் வகைகள்**

1. சாதாரண முறிவு — (Tingle Fracture)
2. கலப்பு முறிவு — (Compound Fracture)
3. சிக்கலான முறிவு — (Complicated Fracture)
4. நொறுக்கப்பட்ட முறிவு — (Comminuted Fracture)
5. முறிந்த ஒரு பாகம் இன்னாரு பாகத்துடன் மாட்டிக் கொண்டு அசையாமலிருப்பது — (Impucted)
6. பச்சை கொம்பு முறிவு — (Green Stick Fracture)
7. தன்னில் தானே முறிவது — (Spontaneous Fracture)
8. பள்ளம் ஏற்படும் முறிவு — (Depressed Fracture)

1. சாதாரண முறிவு

எலும்பு ஒரே இடத்தில் வெளிக்காயம் ஒன்றும் ஏற்படாமல் ஒடிந்திருப்பது.

2. கலப்பு முறிவு

ஒடிந்த எலும்பிற்கும் வெளிக்காற்றுக்கும் சம்பந்தமுண்டாகும், வெளிக்காயம் இருக்கும்.

3. சிக்கலான முறிவு

எலும்பு முறிவோடு இரத்தக் குழாய்கள், நரம்புகள், கணுக்கள் உள்ளுறுப்புக்கள் சேதமடைந்திருப்பது.

4. நொறுக்கப்பட்ட முறிவு

பல துண்டுகளாக ஒடிந்து விடுவது.

5. எலும்பு முறிந்து மற்ற எலும்புடன் மாட்டிக் கொள்வது.

6. பச்சைக் கொம்பு முறிவு

சிறு பிள்ளைகளின் எலும்பு வளையுமாதலால் இது ஏற்படும்.

7. தன்னில் தானே முறிவது

முறிவுக்கு வேண்டிய போதுமான பலாத்காரம் இல்லாவிடினும், நோய் பிடித்திருக்கும் நிலையில் எலும்பு முறிந்து விடும்.

வர்மம்

குரு சிஷ்ய பரம்பரையில் தாம் கற்ற சித்த மருத்துவ கலையும், கிடைத்த அனுபவங்களையும் சிரமமின்றி மனப்பாடமாக வைத்துக் கொள்வதற்காகத் தமிழ் மருத்துவர்களும், சோதிடர்களும் பல நூற்றாண்டுகளாக இந்நூலைக் கையாண்டு வந்துள்ளனர் போலும். எனவே தான் இந்நூல் யாண்டும் பரவாமல் குறிப்பிட்ட சில இடங்களில் செய்யுட்கள் இலக்கண இலக்கிய வரம்புக்கு விஞ்சிய தாகவும், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களாகவும், சிற்சில அடிகள் நீண்டும் அவ்வாறு சில இடங்களில் குறைந்தும் அமைந்துள்ளன. எனினும் மென்மையுடையதாகவும் பொருள் காண்பது எளிதாகவுமுள்ளது. இக்கலையை அறிந்தவர்கள் மிக்க இரகசியமாகவே வைத்திருப்பதும், தங்களிடம் உள்ள ஒலைச் சுவடிகளை அச்சேற்றி, வெளியிடாததும் இக்கலை பரவாமைக் குரிய பிற காரணங்களாக கருதவும் இடமளிக்கின்றன.

**வர்ம நூல்கள் :**

சித்த மருத்துவத்தில் ஒரு முக்கிய பிரிவான வர்ம நூல்கள் ஏராளம் உள்ளன. அவைகளில் அச்சிடப்படாதவற்றின் ஒரு சில வற்றைக் கீழே கூறுகின்றேன்.

1. வர்ம புலிப்பாணி
2. வர்ம ஆணி நூல்
3. வர்ம கண்ணாடி
4. வர்ம கண்ணாடி வடக்கன் வழி
5. வர்ம திறவுகோல்
6. வர்ம நாலுகை மாத்திரை
7. வர்ம சரநூல்
8. வர்ம பஞசவித பதிவடங்கல்
9. வர்ம குடோரி நூல்
10. வர்ம பஞ்ச சூத்திரம்
11. வர்ம பீரங்கி
12. வர்ம குரு நாடி
13. வர்ம பொன்னூசி திறவுகோல்
14. வர்ம குண்டூசி திறவுகோல்
15. வர்ம ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி
16. வர்ம வில்லும் விசையும்
17. வர்ம லாட சூத்திரம்
18. வர்ம சர சூத்திரம்
19. வர்ம தேரையர் நரம்பு சூத்திரம்
20. வர்ம சாரி
21. வர்ம சிலோற்பத்திக் காண்டம்
22. நரமாமிச நூல்
23. வர்ம ஊசி முகம் — 1800.

**1. வர்மங்கொண்டால் ஏற்படும் குறிகுணங்கள்**

இவ்வுலகில் வாழும் மாந்தர்களுக்கு அடிபடுவதால் உண்டாகக் கூடிய வர்மங்களுக்கும், கீழே விழுவதால் ஏற்படும் வர்மங்களுக்கும், பிறர் அடிப்பதாலும் அடிபட்டு எலும்புகள் முறிவதாலும், எதிர் பாராத விபத்துக்களினாலும், உயரமான இடங்களிலிருந்து கீழே விழுவதாலும், அடிபட்டு அங்கங்கள் சிதறுவதாலும், மனம் பேதலிப்பதால் ஏற்படும் விபத்துக்களாலும் இன்னும் பல காரணங் களால் ஏற்படும் வர்மங்களுக்கு தைலங்கள், கசாயங்கள், மாத்திரைகள், இலேகியங்கள், தாரையிடுதல், நசியமிடுதல் போன்ற வைகள் கையாளப்படுகின்றன.

வர்மத்தினால் ஏற்பட்ட சுரம்போன்ற வியாதிகளை மாத்திரையால் நீக்கலாம். உள்வர்மம் கொண்டவைகளை இலேகியத்தால் குணமாக்கலாம். இரத்தக் கட்டு போன்றவற்றை எண்ணெய் போன்றவற்றால் மசாஜ் செய்வதால் குணமாக்கலாம். வர்ம ஸ்தலங்களில் அடிபட்டு மயக்கமுற்றோருக்கு சுக்கு போன்ற தூள்களை நசியமிடுவதால் குணமாக்கலாம்.

வர்ம இடங்களில் அடிபட்டு ஏற்படும் வலிப்பு போன்ற குறி குணங்களுக்கு கட்டி தைலத்தில் தோய்த்து ஒற்றடம் கொடுத்தால் வலிப்பு போன்றவை சுகம் பெறும். மருந்து செய்யும் காலத்து குருபரனை நினைந்து கொண்டு பிறஉயிர்களைத் தன்னுயிர் போல பாவித்து அடிபட்டுள்ள வர்ம இடங்களைக் கண்டு கொண்டு மருந்து செய்ய வேண்டும்.

மருத்துவன் நோயாளனைக் கண்காணிக்கும் போது அடிபட்ட வர்ம இடங்களைக் கண்டு கொண்டு, சாத்தியமான குறிகள் கண்டால் சிகிச்சை செய்ய வேண்டும். அசாத்தியமான குறி குணமாக இருப்பின் பாராமல் விட்டு விட வேண்டும். உடம்பு விறைப்பாக இருந்தால் அது அசாத்திய நிலை என்று கண்டு கொள்ள வேண்டும்.

மிகவும் நுணுக்கத்தோடு அடிபட்ட இடத்தைப் பார்க்கும் போது அந்த இடத்தில் வியர்வை குளிர்ச்சி காணப்படும். சுவாசிக்கும்போது அந்த இடத்தில் சரியாக மூச்சுவிட வாங்க முடியாது. இக்குறி குணங்களைக் கொண்டு சாத்தியமா அசாத்தியமா என்பதை அறிந்து கொள்ளலாம்.

படுவர்மங்களில் வர்மம் கொண்டால் உயிருக்குக் கெடுதல் உண்டாகும். உயிர் கலைகள் நான்கான கருவிழி மேலே வாங்கி, கண்ணீர் வருதல், மலம், மூத்திரம் போகாமலிருத்தல், சில நேரம் மலம், மூத்திரம் செல்லுதல், விந்து வெளி வந்துவிடுதல் ஆகிய இவை நான்கும் கண்டால் அசாத்திய குறி குணங்கள் ஆகும். இவைகள் நான்கும் இல்லாவிட்டால் சாத்தியம். முக்கியமான இவ்வர்ம நிலைகள் யாவும் அறுத்தெடுத்த வாசலான தொப்பூளில் காணப்படும்.

எட்டு கலைகளாகிய தட்டு வர்மம் எட்டாகும். இது அசாத்தியம் [illegible] நிலையாக காணப்படும் படுவர்மம் பனிரண்



600 009
143261
LC:4:6
N88

டாகும். இதுவும் அசாத்தியமாக கருதப்படுகிறது. இவைகளுக்குத் தீரும் தீராத நிலையாக உள்ளது நான்கு பிராண கலையாகும். அவை மலம், மூத்திரம், சுக்கிலம், கருவிழி மேலும் பனிரெண்டு கலையாக விளங்கும். படுவர்மம்-12-ம் தொடுவர்மம்-96-ம் இவை சேர்ந்து 108 வர்மமாக காணப்படுகிறது. இவைகளுக்கு அடிபட்ட வுடன் குறிப்பிட்ட நேரத்திற்குள் பரிகாரம் தேடவேண்டும்.

வர்மம் கொண்ட இடத்தில் வலி, வீக்கம், காண்பது மட்டுமின்றி பஞ்ச பூதங்களும் பாதித்து மனக்கலக்கம் ஏற்பட்டு, உள்ளுணர்வு குன்றிப் போகும். மேலும் கண்கள் சூரியனுடைய செங்கதிர்கள் போன்று காணப்படும். பின்பு சுழி முனைப் பாகத்திலிருந்து மேலாக சுழி முனை அடக்கத்திற்கு இப் பஞ்ச பூதங்களும் வந்து சேர்ந்து தலையில் உச்சி பாகத்திற்கு அமுத நிலையை அடக்கிவிடும். அங்கேதான் சிவ நிலை அடக்கம் காணப்படும். அதுவே வர்ம அடக்கமாகும்.

வர்ம இடங்களில் காயம் ஏற்பட்டால் குறி குணங்கள் எவ்வாறு இருக்கும் என்பதைக் கீழே காணலாம்.

நம் உடலில் வர்மம் கொண்டு காயம் ஏற்பட்டால் பல அசாத்திய குறி குணங்கள் காணப்படும். நெஞ்சு நேர்பாகமான இதயத்தில் வர்மங் கொள்ளுதலே குரல்வளை நெருக்குண்டு உள் நரம்புகள் அழுத்தம் ஏற்படுவதாலும், கை பொருத்து நழுவுவதா லும், வாயில் நீர் பாய்ந்து கொண்டிருக்கும். அதிக வியர்வை காணப்பட்டு சுரமும் காணப்படும். கழுத்துப் பாகம் ஒரு புறமாக வலித்து தலையை இரண்டு பக்கமும் உருட்டுதல், உடல் முழுவதை யும் அதிவேகமாக தரையில் அங்கும் இங்கும் புரண்டு உருளுதல், பின் கண் விழித்து தன் இரு கைகளையும் நன்றாக உற்று நோக்கி அதி பயங்கரமாக சீற்றம் கொள்ளுவார்கள்.

கோபம் சற்று தீர்ந்ததும் இரண்டு கைகளும் கால்களும் பற்பல சேட்டைகளை செய்து மனம் பேதலித்து காணப்படும். பின்பு உடல் முற்றும் குளிர்ந்து காணப்படும். உடல் அதிக பாரமாக காணப்படுவதோடு கருடன் (பருந்து) பார்வை பார்ப்பது சற்று நேரம் கழிந்ததும் இரு கண்களும் அடைப்பது போன்ற குறிகுணங்கள் காணப்படும்.

மேலும் விரை (Testis) யில் இரத்த கட்டு உண்டாதல், மூலம் (Anus) வெளிவருதல், மயக்கம் உண்டாகி உடல் முற்றும் குளிர்ந்து

திடீரென்று மேலே எழும்பி பார்ப்பவரை இரண்டு காலாலும் உதைத்தல், ஐம்பொறிகளும், தன் செயலைச் சரியாகச், செய்யாமை, பின்பு மயக்கமுண்டாதல், அத்துடன் சிரப்பும் காணப்பட்டு, கபம் மிகுந்து உடல் முற்றும் வியர்வை காணப்பட்டு நடுக்கமுண்டாகி மயக்கமுறும்.

உடல் முற்றும் நடுங்குவதோடு மனம் பேதலித்து தலையைக் கவிழ்ந்தவாறு கண்ணின் கருவிழி மேல் சென்று அதிக கோபத்துடன் பார்ப்பதும், கோபம் தணிந்து முகத்தைக் கவிழ்ந்து வயிற்றை இறுக்கி பிடிப்பது போல் காணப்பட்டு, முன்னுக்கு உடலை வளைத்து நேராக நிமிர்ந்து நிற்கமுடியாமல் செய்யும். பின்பு தூக்கம் காணப்பட்டு, வயிறு பொருமி, சிறு வியர்வை, விக்கல் இவைகள் கண்டால் அசாத்தியக் குறிகள் என்று தீர்ப்பு சொல்லலாம்.

இவ்வாறு இருந்து, மேலும் துர்க்குறி குணங்கள் கண்டால் இறந்து போகும். இது மட்டுமல்லாமல் பிராண கலையாக உள்ள மலம், மூத்திரம், விந்து, கண்ணீர், கருவிழி போன்றவைகளின் தன்மை வேறுபட்டாலும் பிழைப்பது அரிதாகும் என்று அகஸ்தியர் கூறுகின்றார்.

வர்மத்தில் முக்கியமாகக் கருதப்படும் உச்சிக் காலம், திலர்த வர்மம், புஜ வர்மம், நட்டெல் வர்மம், வாரி கோரி வர்மம், நேர் வர்மம், அஸ்தி சுருக்கி வர்மம், கொண்டைக்கொல்லி வர்மம், கதிர் காம வர்மம், கதிர் வர்மம், கைப்பூட்டு வர்மம் (நுரையீரல்) அடப்ப வர்மம், சங்குதிரி வர்மம், பிடரி வர்மம், வெல்லுறுமி, தல்லுறுமி போன்ற வர்மங்களும்,

கையிலும், காலிலும் உள்ள மணிபந்த வர்மம், ஹனுமான் வர்மம், மூச்சடக்கி வர்மம், சுழிமுனை வர்மம், இடகலை, பிங்கலை வர்மம், பழுக்கள் ஒன்றன் மேல் ஒன்று நழுவல் (Dislocati n of th ribs) வாகென்பு கீழே இறங்குதல் (Disl cation of the scapuler bone) வம்சிகள் நழுவுதல் போன்ற வர்மங்களும், தொப்பூழ் பாகலம், மூலத்து ன் அல்லது குதத்துடன் சேர்ந்து காண்பதும், பின்பு குதம் வெளிவருவதும் (prolapse of the Rectum) கத்தரிக்கோல் போன்று காணப்படும் இடுப்பு பாகமும் இருகால் பெருவிரல் பாகங்களும் அடிகொள்வதாலும், சுவாசநிலை தடைபட்டு மயக்கமுறுதல், குண்டலிப்பக்கம் காணப்படுகின்ற குய்யமுனை மேலே சென்று விடுவதாலும் இடுப்பு பொருத்திற்கு கீழாக உள்ள பாகங்கள் பிணம் போன்று அசையாதிருப்பதும் போன்ற குறி குணங்கள் அசாத்தியத் திற்குரிய காரணங்களாகும்.

மேற்கண்ட குறி குணங்கள் காணப்பட்டாலும் ஒரு சில வர்ம இடங்களைக் கண்டுகொண்டு கை பாகங்கள் செய்தாலும் குணம் கிடைக்காவிட்டால் திட்டமாக உயிர் போய்விடும் என்று கண்டு மருத்துவம் செய்யாமல் அனுப்பிவிடுவது உத்தமமாகும்.

உடம்பில் பலமாக அடிகொண்டு, கை, கால்கள் உணர்ச்சி இல்லாமலும், ஐம்பொறிகளும் தத்தம் தொழில்களைச் செய்யாமல், உயிரானது உடலை விட்டுப் போகும்சமயம் கண் கருவிழியில் உணர்ச்சி இருந்தால் உயிர் பிழைத்து விடுவான்.

### எலும்புகள் ஒடிந்தால் சரி செய்யும் முறைகள்
### குண்டுமணி விலகல் (இடுப்பு பொருத்திலுள்ள தொடை எலும்பு நழுவுதல்)

கால் நடக்கவும், ஓடவும், கீழே இருப்பதற்கும் ஆதிகாரணமாக உள்ள குண்டலிப்பக்கம் அமைந்திருக்கும் தொடை எலும்பு (அனுமிகை) (Innominate bone) நழுவி காணப்பட்டால் இரு கால்களையும் பத்மாசனப்படி ஒன்று சேர்த்து இரண்டு மூட்டுக்களையும் சற்று கீழ்பாகத்தில் அமர்த்தல் செய்து சரியானபடி கம்ச குழியில் பொருந்தும்படி செய்து பின்பு குண்டலியின் மேல் பக்கமாக உள்ள முதுகுத் தண்டின் கீழாகக் காணப்படும். நாயிருப்பு வர்மத்தில் ஒரு சதுரமான பந்து வைத்து அழுத்தம் செய்து தொடையென்பின் உள் பக்கமாக உள்ள பதக்களை வர்மத்தில் கட்டுப் போட வேண்டும். இவ்வாறு கட்டும் போது பெருவிரல் கொண்டு அழுத்தமாக பதக்களை வர்மத்தைத் தாக்க வேண்டும். பின்பு 90 நாட்கள் சென்றபின் வசவெண்ணெய் தேய்த்து 41 நாட்கள் இவ்வாறு செய்தால் சுகம் கிடைக்கும். அவ்வாறு செய்யாவிட்டால் பூரண சுகம் கிடைக்காது.

### மணிபந்தம் கட்டும் முறை

இரு கைகளில் அல்லது இரு கால்களில் அங்குலிகளுக்கு மேலாக உள்ள குழச்சிப் பாகம் நழுவி விடவோ அல்லது அடி கொண்டு எலும்பு ஒடிந்தாலோ பொருத்துக்கள் விலகி விட்டாலோ குளச்சுக்கு மேலாகக் காணப்படும். ஐந்து என்புகளையும் மெதுவாக கீழிருந்து மேலாக மசாஜ் செய்து உள்ளங்கை, உள்ளங்கால் போன்றவற்றில் விரல் வைத்து அழுத்தம் கொடுத்து எலும்புகள் நழுவிய இடத்தில் பொருந்த செய்தல் வேண்டும்.

பின்பு வட்டமான பத்து காசளவில் கட்டியான பந்து செய்து நழுவிய எலும்பில் அழுத்தம் கொடுத்து மேலே கொண்டு சென்று

சரியானபடி தடவல் செய்து மேல்பக்கமும் கீழ்பக்கமும் பஞ்சு வைத்து முறி வெண்ணெய் தாரை செய்து 3 நாட்கள் கழித்து கட்டை அவிழ்த்து குறி குணங்களைக் கண்டு கொண்டு இவ்வாறு 90 நாட்கள் அவிழ்த்து அவிழ்த்து கட்ட வேண்டும்.

90 நாட்களும் சென்றபின்பு வசவெண்ணெய் போட்டு மசாஜ் செய்யவேண்டும். 48 நாட்கள் மசாஜ் செய்து கட்டுக்களை அவிழ்த்து வர்மமுறைப்படி செய்தால் பூரண சுகம் கிடைக்கும். செய்யும் முறை தவறினால் சுகம் கிடைப்பது அரிது.

வர்மங்கொண்டு எலும்பு ஒடிந்தாலும், ஒடிந்த பாகத்தைக் கட்டும் போது கட்டு நழுவி விட்டாலும், சதைப்பாகம் வேறாக பிரிந்து தனியாக போய்விட்டாலும், மாணவன் குருவின் பாதத்தை மனதில் தியானம் செய்து நாம் செய்த பாவத்திற்குத் தண்டனை எனக் கருதி மனதைத் திடப்படுத்திக் கொண்டு சிகிச்சைசெய்வது நலமாகும்.

## முட்டெலும்பு நழுவுதல்

## (DISLOCATION OF THE PATELLA BONE)

கால் முட்டெலும்பு (சிரட்டை) இருக்குமிடத்திலிருந்து நழுவி விட்டாலும், முட்டின் முழுபாகத்திலும் சுற்றிக் காணப்படும் சவ்வானது அறுந்து சிரட்டை மறுபுறத்தில் போய்விட்டால் திட்டமாக சுகம் கிடைப்பது அரிதாகும். குதிகால் பக்கம் காணப்படும் நரம்பு அறுந்து வேறாக காணப்பட்டாலும் பெருவிரல் மேலாக காணப்படும் நரம்பு அறுந்து வேறாக காணப்படுவதும், தொடையின் நடுப்பாகம், மேலாக காணப்படும் நரம்பு அறுந்து வேறாக காணப்பட்டாலும் சுகம் கிடைப்பது அரிதாகும்.

## முணார் வரி நெரிந்தால் கட்டு

## (Sacral plexus)

குதத்தின் மேலாக காணப்படும் இடுப்பு பொருத்தில் அடி கொண்டு பீடிகை புச்ச எலும்புகள் ஒடிந்து வேறாக காணப்பட்டால் முறி வெண்ணெய் வைத்து மேல் பூச்சு செய்தல் வேண்டும். இடுப்பைச் சுற்றி துணி வைத்து கட்டிக்கொண்டு சரியான முறையில் மசாஜ் செய்து கொண்டு ஒடிந்த எலும்புகளைச் சரிசெய்து கொள்ள வேண்டும். ஒடிந்த எலும்புகள் ஒன்று சேராவிட்டால் வசவெண்ணெய் தடவல் செய்தால் நல்லசுகம் கிடைக்கும்.

### நடுவரியில் வாரி பூணெல்

(தண்டு வடத்தின் நடுப்பாகம் முறிந்தால்)

தண்டு வடத்தின் நடுப்பாகம் காணப்படும் வாரிப் பூணெலும்பு முறிந்தால் சுகம் கிடைப்பது அரிதாகும். தண்டு வடத்தின் கழுத்துப் பாகத்தில் காணப்படும் பொன்னெட்டி வர்மத்தில் முறிவு ஏற்பட்டால் தலை குழைந்து வாயில் நீர் வந்தாலும் உயிரானது உடலை விட்டு திட்டமாக போய்விடும். எக்காரணம் கொண்டும் மேற்கூறிய குணங்கள் இருந்தால் நோயாளிக்கு வைத்தியம் செய்யாமல் விட்டு விடுவது நலமாகும்.

### கதலி வனத்தில் சடு

(நெஞ்சின் நடுப்பாகம் முறிவு கொண்டால் வரும் குறி குணங்கள்)

நெஞ்சின் நேர்பாகமாகக் கருதப்படும் கதலி வனத்தில் (Mid sternum) அடிகொண்டு முறிந்தால் வாய் புலம்பல், ஜுரம், குளிர், கபம், மயக்கம் போன்றவை காணப்பட்டால் மருத்துவம் செய்தாலும் உயிர்பிழைப்பது அரிது.

### ஆக்கிராண பாலம்

(மூக்கின் நடுப்பாகம் முறிந்தால் ஏற்படும் குறி குணங்கள்)

மூக்கின் நடுப்பாகத்தில் பலத்த அடிகொண்டு முறிவு ஏற்பட்டு இரத்தம் காணப்படுவதோடு உடல் முற்றும் சுரம் காணப்படும். மேற்கண்ட குறிகுணங்களோடு கபாலம் வீங்கி வாய் புலம்பல் ஏற்பட்டால் வைத்தியம் செய்தாலும் நோயாளி பிழைப்பது அரிது.

### கபால கதலி வனம்

(கபாலத்தின் நடுப்பாகம் முறிவு ஏற்பட்டால் காணப்படும் குறி குணங்கள்)

கபாலத்தில் வேகமாக அடிகொண்டு அடிக்கடி மயக்கம் ஏற்பட்டு நீண்ட நேரம் உணர்வு வராமலிருந்தால் திட்டமாக உயிர்பிரிந்து விடும் என்று சொல்லலாம்.

### கைப்புஜம் சிப்பி தாழ்தல்

(தோள் பொருத்தும் வாகெலும்பும் நழுவினால் ஏற்படும் குறி குணங்கள்)

தோள் பொருத்தில் காணப்படும் புஜ வர்மத்தில் அடிகொண்டால் சிப்பி பாகமாக காணப்படும் வாகெலும்பு கீழே இறங்கிவிடும். நோயாளியின் அக்குள் பாகத்தில் விரல் வைத்து கூட்டு வர்மத்தில்

அமர்த்த சுகம் கிடைக்காமல் இருந்தால் நோயாளியைச் சரியாக படுக்க வைத்து மருத்துவன் கால் கொண்டு நோயாளியின் அக்குள் பாகத்தை அழுத்தி சரியான முறையில் பதித்து வைத்துக்கொண்டு பந்து வைத்து கட்டவேண்டும்.

நெஞ்சின் முன்பாகமும் முதுகின் பின்பாகமும் துணி வைத்து நன்றாக இறுக்கிப் பதியச் செய்து முன்பக்கம் உள்ள தோள் பொருத்தில் ஒரு கட்டு கட்டி பின்பு மேல் பக்கமாக சுற்றி கட்டுவதோடு முறிவெண்ணெய் மேல்பக்கம் விடுதல் வேண்டும். இவ்வாறு ஐந்து நாட்கள் போட வேண்டும்.

ஐந்து நாட்கள் போட்டு தடவல் செய்து 90 நாட்கள் இவ்வாறு செய்ய வேண்டும். 90 நாட்கள் கழிந்த பின்பு 41 நாட்கள் வசவெண்ணெய் போட்டு வர்ம முறையில் தடவல் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் நழுவிய கைபுஜம் சரியான முறையில் வந்து சேருவதோடு கைக்கு நல்ல சக்தியும் கிடைக்கும்.

## கை முட்டு விலகல்

## (முழங்கை பொருத்து நழுவி காணப்பட்டால் வரும் குறி குணங்கள்)

## (Dislocation of the elbow joint)

முன்கையில் முழங்கைப் பொருத்தில் அடிகொண்டு முழங்கை எலும்பு (ஆரை, இரத்தினி) விலகி காணப்பட்டால் கை வைத்து அழுத்தம் கொடுத்து சரிசெய்தாலும் பொருந்தாது. அதைப் பொருத்துவதற்கு கால் வெள்ளைப் பதிவால் நோயாளியின் முழங் கையின் மேல்பகுதியில் தாக்கி கை குளச்சிப் பாகத்தை சற்று மேல் இழுக்க சரியான முறையில் பொருந்திவிடும். முன் கூறப்பட்ட முறைப்படி செய்து, 2 அங்குல வீதியில் 6 அங்குல நீளத்தில் ஒரு மூங்கில் துண்டு எடுத்து அதில் துணி சுற்றி முன், பின், அக, புறப் பக்கங்களில் வைத்துக் கட்டி, அதன்மேல் முறி வெண்ணெய் தாரை செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் நல்லசுகம் கிடைக்கும்.

## கவளி கீறல்

அங்குட்ட விரலுக்கும், தர்சனி விரலுக்கும் இடைப்பட்ட பாகத்தில் காணப்படுவது கவளியாகும். இந்த கவளியில் முறிவு அல்லது கீறல் ஏற்பட்டால் சுகம் கிடைப்பது அரிது. சுவாசம் தடைபட்டால் அசாத்தியம். உடனே நோயாளிக்கு முறி வெண்ணெய் தாரையிட்டு இரண்டு விரல்களையும் சரியான முறையில் வைத்துக்கொண்டு கட்டு போடுதல் வேண்டும். இவ்வாறு செய்வதால் திட்டமாக சுகம் பெறலாம்.

### நால் விரல் மத்தி கிறல்

நான்கு விரல்களுக்கு இடைப்பட்ட பாகமாக காணப்படும் மத்திய பாகத்தில் வர்மமது கொண்டால் சுரம், குளிர், வியர்வை, கபம், சீதம் தோன்றும். அறிவு குன்றி வாய் பிதற்றல் ஏற்பட்டு பற்பல குறி குணங்களைக் காட்டும். அதோடு உயிர் உடலை விட்டுப் பிரிந்து போகும்.

### தோள் புஜத்தின் நெட்டி தாழ்தல்

### (Dislocation of the shoulder joint)

தோள் பொருத்து கீழிறங்கி காணப்பட்டால் உடனே கூட்டு வர்மத்தில் பெருவிரல் கொண்டு அழுத்தம் கொடுத்தால், நோயாளி மிகவும் வேதனைப்படுவதோடு நழுவிய மூட்டு ஒன்று சேர்ந்துவிடும். உடனே கூட்டு வர்மத்தில் (அக்குள்) ஒரு பந்து சேர்த்து, பிடரியின் மேலாக கழுத்தைச் சுற்றி ஒரு கட்டு போடவேண்டும். 90 நாட்கள் சென்றவுடன் வசவெண்ணெய் தடவுதல் வேண்டும். பின்பு முன் தோளில் ஒரு துணியைச் சுற்றி அக்குளின் கீழாக பொருந்தச் செய்து மார்பின் முன்பக்கம் கொண்டு வந்து ஒரு கட்டு கட்டவேண்டும். அவ்வாறு செய்தால் நன்மை பயக்கும்.

### வாரி எல்லு முறிந்தால்

### (விலா எலும்பு முறிந்தால்)

விலா எலும்பு முறிந்தால் கீழ் நோக்கமாக காணப்பட்டால், ஒரு சமமான இடத்தில் குழி தோண்டி, விலாவின் எந்த எலும்பு முறிவு பட்டிருக்கின்றதோ, அப்பாகம் குழியில் நடுவே இருக்கும்படி செய்து, முறிவு பட்ட பாகத்தின் மேல்பாகத்தை அழுத்தம் கொடுத்து கொண்டால் சரியான முறையில் எலும்பு சேரும். பின்பு முறி வெண்ணெய் தாரையிட்டு வந்தால் சுகம் கிடைக்கும்.

### பூணெலும்பு உள்ளே தாழல்

நெஞ்சென்பானது முறிந்து உள்ளே தாழ்ந்தால் உடனே முன்பே கூறின முறைப்படி செய்து, இதற்கு எதிர் பக்கம் மசாஜ் செய்து நோயாளியை மருத்துவரின் அருகாமையில் சேர்த்திருத்தி மறுபுறத்தில் அழுத்தம் கொடுக்க சுகம் கிடைக்கும்.

பின்பு உடலில் சுரம் காணப்பட்டால் வசவெண்ணெய் உள்ளேயும் கொடுத்து, வெளியிலும் போட நல்ல சுகம் கிடைக்கும்.

### எலும்புகள் முறிந்தால் உள் செலுத்த

எலும்பு முறிந்து தோலுக்கு வெளியே ஆறுவிரல் அளவு நீட்டிக் கொண்டிருந்தால் அது அசாத்தியமாகும். வெளிப்பட்ட என்பை உட்செலுத்த, அது உள்ளே செல்லாமல் இருந்தால் அதனுடைய இடைப்பட்ட பாகத்தை அளந்துகொண்டு சற்றுக் கீறி உட்செலுத்தி வைக்கும்போது காயங்களோ, விரணங்களோ ஏற்படாமலும், எலும்புகள் ஒன்றோடொன்று, அழுத்தம் கொள்ளாமலும், அதற்கான வழிகளைக் கண்டு எலும்பை உட்செலுத்த வேண்டும்; உள்ளே செலுத்திய எலும்பு இடம் பெயராமல், முறிவெண்ணெய், உள்ளேயும் கொடுத்து, காயத்தில் இறங்கும்படியான வழிகளையும் செய்ய வேண்டும். இவ்வாறு செய்து முறிவு ஏற்பட்ட விரணங்களெல்லாம் மாறியபின்பு வசவெண்ணெய் வேண்டிய அளவு கொண்டு மசாஜ் செய்தால், எப்படிப்பட்ட காயங்களும் தீரும் என்று தெளிவாய்ச் சொல்லலாம்.

### நரம்பு மருந்துவத்திற்கும் வர்மத்திற்கும் உள்ள தொடர்பு

எல்லா நோய்களும் ஏதேனும் ஒருவகையில் நரம்பு மண்டல தொடர்புடையனவாகவே உள்ளது. நரம்பு மண்டலம் மிக நுட்பமானது. அதற்கு வரும் நோய்களைப் போக்கி சீர்படுத்துவது மிகமிகக் கடினம். பிறவற்றில் ஏற்படும் கோணல்களைச் சரிப் படுத்தலாம். நரம்பு கோணிடில் நாம் ஏதும் செய்தற்கியலாது. இது பற்றியே

> ‘‘அரும்பு கோணிடில் அது மணம் குன்றுமோ
> கரும்பு கோணிடில் கட்டியும் பாகுமாம்
> இரும்பு கோணிடில் யானையை வெல்லலாம்
> நரம்பு கோணிடில் நாமதற் கென் செய்வோம்?’’

எனும் பழம் பாடல் ஒன்று எழுந்தது போலும். இத்தகைய சிறப்பு வாய்ந்த நரம்பு மண்டலம் வர்மத்தில் முக்கிய பங்கேற்கிறது. எங்ஙனமெனில் வர்மம் எனப்படுவது பேசிகள், விசிகள், பொருத்துக்கள், நரம்புகள் இவை பின்னிப் பிணைந்து இருக்கக்கூடிய மர்மமான இடமே வர்மம் என்று சொல்லப்படும். வர்மம் ஒருவனுக்கு கொண்டதென்றால் அதில் முக்கியமாக பங்கேற்பது நரம்பே ஆகும். நரம்புகள் பின்னிப் பிணைந்து கிடக்கின்ற குறிப் பிட்ட இடத்தில் மாத்திரையளவுக்கு அதிகமாக அடியோ, தட்டு தலோ குத்துதலோ படுமாயின் உணர்விழப்பு, மயக்கம், செய லிழப்பு இவற்றில் ஏதேனும் ஒன்று நிகழலாம்.

நரம்பு மண்டலத்தில் தலைமை பீடம் மூளை, மூளையின் இருப்பிடம் தலை, ‘தலை’ என்ற சொல்லுக்கு முதன்மை, சிறப்பு,

உறுதி எனும் பொருட்களும் உள்ளன. எனவே தான் 'எண் சாண் உடம்பிற்கும் தலையே முதன்மை' என்ற பழமொழி வழங்கலாயிற்று. மனிதனின் வாழ்விற்கும் தாழ்விற்கும் அறிவிற்கும், ஆற்றலுக்கும், புகழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும், அவனுடைய மூளையின் அமைப்பும், அதன் இயக்கமும், அது பெறும் நலம் அல்லது நோய் இன்ன பிறவும் காரணங்களாக அமைகின்றன. பல ஆயிரம் கணிப்பான்கள் (Computers) ஒன்று சேர்ந்தாலும் அவை மனித மூளைக்கு ஈடாக மாட்டா. இத்தகைய விந்தையான மூளையின் அமைப்பை பார்ப்போம்.

மூளையானது பெருமூளை (Cerebrum) மூளைத்தண்டு (Brainstem) சிறுமூளை (Derebellum) மூளையின் தொடர்ச்சியாக முதுகின் நடுவே செல்லும் தண்டுவடம் (Spinalcord) ஆகியன. தண்டுவடத்திற்குப் பாதுகாப்பாக முதுகெலும்புத் தொடர் அமைந்துள்ளது. மூளையிலிருந்தும், தண்டுவடத்திலிருந்தும், நரம்புகள் வெளிச் செல்கின்றன. தலைப்பகுதியில் பன்னிரு இணை நரம்புகள் உள்ளன.

அவை

1. மோப்ப நரம்பு — Olfactory
2. பார்வை நரம்பு — Optic
3. கண் அசைவு பெருநரம்பு — Occlomotor
4. கண் அசைவு சிறுநரம்பு — Trochlear
5. மூக்களை நரம்பு — Trigeminal
6. கண் அசைவு துடிணநரம்பு — Abducent
7. முக நரம்பு — Facial
8. கேள்வி நரம்பு — Auditory
9. நாத் தொண்டை நரம்பு — Glosso pharyneal
10. உதர நரம்பு — Vagus
11. தோளசைவு நரம்பு — Acessary
12. நாவசைவு நரம்பு — Hypoglossel

என்பன. தலைப்பகுதியில் காணும் பன்னிரு இணை நரம்புகளைப் போல் கண்டத்திற்கு மேல் 37 வர்மங்கள் உள்ளது. இதனைக் கீழ் கண்ட பாடல் விளக்கும்.

கேளப்பா சிரசு நடு கொண்டக் கொல்லி
  கீர்த்தி பெறஓட்டையின் கீழ் சீறுங் கொல்லி
நாளப்பா விரல் நாலே கீழே பிடரிக் காலம்
  நாலிறை மேல் முன் சரிதி வர்மம்
பாளப்பா இரண்டிறைக் கீழ் பொச்சை

வர்மம் பகராத ஓரிறை வலமே குற்றிக் காலம்
கேளப்பா செவிகுற்றி காலஞ் சொல்வேன்
பிடரியின் மேலிறை நாலில் முடிச்சி வர்மம்

வர்மமெடா கதிர்போல பாய்கைக் காலம்
வளமான கண்ணின் கீழ் நட்சத்திர காலம்
கற்பமெடா ரண்டிறை கீழ் காம்பூரி வர்மம்
கருது மோரின்ற வலமே மூர்த்திக் காலம்
தற்மமெடா அரையிறை கீழ் அண்ணாங்காலம்
தக்க மூன்றின்ற வலமே வெட்டு வர்மம்

கபாலமென்ற கருவிழியருகில் மந்திரக்காலம்
வளமான நெற்றி நடு பச்சி வர்மம்
பாலமென்ற அரையிறை கீழ் பாலவர்மம்
பகர்ந்த இரண்டிறை வலமேல் நேத்திர வர்மம்
காலமென்ற மூன்றிறை கீழ் பொச்சை வர்மம்
கருதி நிறை கையருகில் மாகாரி வர்மம்

அடியான ஓட்டையில் கீழ் அடப்பனாகும்
அதனிரகச் சிறைக்குள் முன் முடிச்சி
படியான எட்டிறை சூழல் கண்கலங்கி
பாடுகிறேன் நல்லிருப்பு அமர்தக்காலம்
துடியான ஓட்டையின் கீழடப்ப வர்மம்
துகையான ஆறுவிரல் உதிரக்காலம்
விடிவான முண்டிறுக்கி உறக்க காலம்
வளமான காக்கோட்டை சுமைவர்மம்

என்பன மேற்கண்ட வர்மங்களில் சில நரம்புகளுடன் தொடர்புடையன என்பதை உதாரணங்களுடன் காண்போம்.

**திலர்தக் காலத்தின் குறி குணம்**

''தானான திலர்த வர்மம் கொண்டுதானால்
தயவான வாய் பிளந்து அண்ணாந்தே தான்
வானான தலை குழைந்து வாய் பேசாது
வரிசையாய் அறிவிழந்து குழைந்து போம்
தேனாக முறிந்திடிலோ மீளாதப்பா
செப்புகிறேன் கடிகையிது மூன்றே முக்கால்
தானாக குணங்களை நீயறிந்து கொண்டு
தயவான கை பாகம் நாடுவாயே''.

**மூர்த்திக் காலத்தின் குறிகுணம்**

ஓமென்ற மூர்த்தி வர்மம் கொண்டு தானால்
உத்தமனே செய்குணத்தை உரைக்க கேளு

ஆமென்ற மண்டையிலே உணவு குத்து
அறிவு கெட்டு மயங்கும் பாரே அதன் பின்னால்
வா மென்று முன்கூட்டி வலிக்குமப்பா
வரிசையாய் சித்தரத்தைப் பொடித்துக் கொள்ளு
தேவமென்ற சிறு புள்ளடி விட்டரைத்து
பொத்ததிகையும் நாளட்டத்தில் திரும்பாரே.

பொய்கை வர்மத்தின் குறிகுணம்

''மதியான பொய்கை வர்மம் கொண்டு தானால்
மைந்தனே செய் குணத்தை மட்டமாய்க் கேளு
சதியான கண்புகையும் காய்ச்சலுண்டாகும்
சார் பொய்கைக் குற்றியே புருவஞ்சேரும்
குதியான வாய் மூக்கில் நீரொலிக்குக்
கூறினதோர் குறிகளை நீ கூர்ந்து பாரு
சதியான நாழிகைதான் அறுபத்தொன்று
தப்பாமல் கடருமென்றால் சார்ந்து செய்யே''.

மேற்கண்ட வர்மங்கள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒருவகையில் நரம்புகளுடன் தொடர்பு கொண்டிருப்பதனைக் கண்டோம்.

இனி உடற்பகுதியில் காணும் முப்பத்தொரு இணை நரம்புகளையும், அதில் காணும் வர்மங்களையும் பாதிக்கப்படும் குறிகுணங்களையும் காண்போம்.

மூளையிலிருந்து பன்னிரு இணை நரம்புகள் வெளிவருவது போல் தண்டுவடத்திலிருந்து முப்பத்தொரு இணை நரம்புகள் வெளிவருகின்றன. இவை முதுகெலும்பு தொடரிலுள்ள முள்ளென்புகளுக்கிடையே வெளிவருகின்றன, கழுத்து பகுதியிலிருந்து எட்டு இணைநரம்புகள் புறப்பட்டு கழுத்துக்கும், கைகளுக்கும் செல்கின்றன. முள்ளெலும்புகட்கிடையேயுள்ள குருத்தெலும்பு திட்டு (Inter Verthrul disc) அடிபட்டோ முதுமையின் விளைவாகவோ வெளித்துருத்தி (Prolapse) இந்நரம்புகளின் மீது அழுத்துவதால் தான் சிலருக்கு கழுத்திலும் கைகளிலும் தாளமுடியாத வலியும் வலுக்குறைவும் ஏற்படுகின்றன. நெஞ்சுப் பகுதியிலிருந்து பன்னிரு இணை நரம்புகள் புறப்பட்டு பெரும்பாலும் கால்களுக்கும் மலக்குடல் சிறுநீர்ப்பை, பிறப்புறுப்புக்கள் முதலியவற்றிற்கும் செல்கின்றன. கழுத்துப் பகுதியைப் போலவே இங்கும் குருத்தெலும்பு வெளித்துருத்தி நரம்புகளின் மீது அழுத்தினால் முதுகிலும் கால்களிலும் வலி ஏற்படும். சிலருக்கு கால்களில் சக்தி குறையும். சிறுநீர்

மலம் கழிவதில் துன்பமும் இனப்புணர்ச்சி கொள்ள இயலாமையும் ஏற்படுகின்றன. மேற்கண்ட குறிகுணங்கள் முதுகெலும்பு தொடரில் காணும் வர்மங்களாலும் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக (1) வலம்புரி இடம் புரி வர்மம் (2) வெல்லுறுமி, தல்லுறுமி வர்மம்.

### வலம்புரி இடம்புரி வர்மத்தின் குறிகுணம்

''உன்னியே வலம்புரி கொண்டு தென்றால்
உத்தமனே மலசலம் அடைத்துக் கொள்ளும்
மன்னியே வயிறூ தும் சுவாசம் முட்டும்
மைந்தனே கைகாலும் முதிந்து போம்
நன்னியே தான் நாழிகை தொண்ணூ றாகவும்
நாடியே செய்யாதே வித மிட்டால்
பன்னியே குரு பரனை தியானம் செய்து
பதறாமல் செய்துவிடு பறக்குந்தானே.''

### வெல்லுறுமி தல்லுறுமி வர்மத்தின் குறிகுணம்

''பார்க்குமந்த வெல்லுறுமி கொண்டு தென்றால்
பாடுகிறேன் செய்குணத்தை பரிந்து கேளு
தீர்க்கமாய் அடிவயிற்றில் தரிப் புண்டாகும்
செப்புகிறேன் மதிமயங்கி நீர்தான் போகும்;
மயக்கமுண்டாம் நீக்கமாய் பித்தனைப் போல ஆடி
நேரான சன்னியோடு சீதமுண்டாம்
பார்க்கவே கடிகை பதினெட் டாகும்
பாலகனேரம் பரிந்து பார்த்துச் செய்யே.''

மேலே கண்ட வர்மங்கள் குத்து, வெட்டு, துப்பாக்கி, அடி போன்றவற்றால் ஏற்படும். உயரத்திலிருந்து கீழே விழுதல், குனிந்து வேலை செய்யும் போது முதுகின் மீது பளுவான பொருட்கள் விழுதல், விரைவு வண்டிகளில் செல்லும்போது திடீரென்று வேகம் தடைபட்டால் கழுத்து பிசகுதல் போன்றவற்றால் வர்மம் ஏற்படலாம். தண்டு வடத்தில் காணும் வெல்லுறுமி, தல்லுறுமி, வலம்புரி, இடம்புரி வர்மம் கொண்டால் கால்கள் செயலற்றுப் போதல், இனப்புணச்சி கொள்ள இயலாமை, நீர் சரிவர இறங்காமல் துளித் துளியாய் இறங்கல், மலச்சிக்கல் ஆகிய குறி குணங்கள் ஏற்படும். இந்நிலையை துவக்கத்திலேயே மருத்துவரிடம் காட்டி கண்டறிந்து மருத்துவம் செய்தால் இந்த இரங்கத்தக்க நிலை ஏற்படாது செய்யலாம். வர்மம் கொண்டதனால் ஏற்படும் இன்னல்களை வர்ம இளக்கு முறையும் தடவு முறையும் கைக்கொண்டு நோய் நீங்கச் செய்யலாம்.

## சித்த மருத்துவத்தில் வர்மம் பக்கவாதம்

நம் முன்னோர்கள் எந்தவிதமான வசதிகளும், நாகரிகமும் இல்லாத ஆதி காலத்தில் வர்ம முறைப்படி பல நோய்களை தீர்த்து வைத்தார்கள். அவர்கள் விட்டுச் சென்ற பொக்கிஷங்களான வாட சூத்திரம், வர்ம கண்ணாடி, வர்ம சூத்திரம், வர்ம பீரங்கி, வர்ம ஆணி போன்ற பல நூல்கள் நமக்குப் பயன்படக் கூடியவை. மேல் நாட்டு வைத்திய முறையான அக்கு பன்சருக்கு (Accu-puncture) ஈடாக வர்ம வைத்திய நூல்களை விட்டுச் சென்றது இந்திய மருத்துவத்துறை சிறந்து விளங்க பெரிதும் துணை புரிகிறது. வளர்ந்து வரும் இந்திய மருத்துவத்தில் வர்மம் ஒரு பெரும் பிரிவினைச் சாரும். இவ்வர்மத்தின் மூலம் பக்கவாதத்தினைத் திட்டமாக பூரண சுகமாக்க முடியும். இங்கு வர்மம் எப்படி ஏற்படுகிறது; எந்த வர்மம் கொண்டால் பக்கவாதம் வரும், வந்தபின் உள்ள இளக்குமுறையும், தடவு முறையும், மருத்துவமும் இங்கு இதனைப் பற்றி விவரிக்கப்படுகிறது. வர்மம் கொள்வதைப் பற்றிக் கூறும் பொழுது,

''கேளப்பா தடியடிகள் படுதலாலும்
　　கெடியான எறிவிசைகள் கொள்ளலாலும்
வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்
　　மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும்,
மேலப்பா ஆகாசமதிலே நின்று
　　மெய்மறந்து கைமறந்து விடுதலாலும்
தாளப்பா பற்பலவாம் விதத்திலே
　　சங்கையில்லா காலமது சாருந்தானே''.

மேற்கண்ட பாடலின்படி காலம் என்பது வர்மம். பக்கவாதத்தில்
கொண்டைக்கொல்லி வர்மம் — It is in the region of the vertex.
பிடரிக்காலம் — It is the region of the external occipital protrubance of the skull.
பொட்சை வர்மம் - It is behind the mastoid process of the skull. The occipital artery crosses the point.
செவிகுத்தி காலம் — It is the region of the temperomand ibular joint.

சங்குதிரிக்காலம், அடப்பக்காலம், கரண்டை வர்மம், கால் பெரு விரல் நரம்பு வர்மம் ஆகிய இடங்களில் வர்மம் கொண்டால் பக்கவாதம் வரும். எங்ஙனமெனில் குறிப்பாக கால் பெருவிரல் நரம்பு வர்மம், கரண்டை வர்மம் இவற்றில் அடிபட்டால் காலின் பெருவிரலிலிருந்து நரம்பொன்று வீணை போல் காணும். அந்த

நரம்பில் வர்மம் கொண்டால் உடலில் நாள் செல்லச் செல்ல மூன்று மாதம், ஆறுமாதம், ஒரு வருடத்திற்குள் ரத்தம் குறைந்து குதிகால் மேலெழும்பி இரண்டு கால்களும் அசைக்கவும் நடக்கவும் முடியாமல் போய்விடும். இதைத்தவிர நாடியில் இடகலை, பிங்கலை, சுழுமுனை என்பவற்றுள், சுழுமுனையை கத்தரிக்கோல் மாறல் எனச் சொல்வர். மூளையிலிருந்து இடகலை நாடியானது, வலப் புறத்திலிருந்து புறப்பட்டும், பிங்கலையானது இடப்பக்கமிருந்து புறப்பட்டும் இறங்கி கத்தரிக்கோலின் ஒரு பகுதியை மற்றப் பகுதி மாறி இருப்பதுபோல் மேற்கூறிய நாடிகளும் வலப்பக்கமுள்ளது இடப்பக்கமும், இடப்பக்கமுள்ளது வலப்பக்கமாயும் மாறி சுழன்று கீழ் நிலையாகிய மூலாதாரம் வரை பாயும், இடப்பக்க உறுப்புக்கள் தாக்கப்படுமாயின் மூளையில் வலப்பக்க நாடியும் வலப்பக்க உறுப்புக்கள் தாக்கப்படுமாயின் இடப்பக்க நாடியும் கேடு அடைந்து பக்க வாதத்தின் குறி குணங்கள் காட்டும்.

## பக்கவாதத்தின் குறி குணங்கள்

உடல் முற்றும் வாயு மிகுந்து பரவி முக்குற்றங்களும் கேடடைந்து அசைவுற்று உடலை நையும்படி செய்து உடலில் தாங்கமுடியாத வலியையுண்டாக்கி உடலின் ஒரு பக்கத்தில் இசிவை யும் கை, கால், கோணுதலையுமுண்டாக்கும். உடல் வியர்க்கும், செத்தவனுடைய கால்போல் கால் துவண்டு தூக்கமுடியாமலும் நடக்க முடியாமலும் கைகள் ஒன்றையும் பிடிக்க முடியாமலும் உணர்ச்சியின்றிச் சோரும்; அன்றியும் மயிர் கூச்செறிதல், உடல் திமிர் கொள்ளுதல், வாய் கோணி உமிழ்நீர் தானாகவே வடிதல் உடல் பித்தம் பெருகியது போல் வெப்பம் அடைதலாகிய குறி குணங்களைத் தோற்றுவிக்கும். இதனைக் கீழ்கண்ட பாடல் விளக்கும்.

உண்மையா யுடம் பெல்லாம் வாயுவாகி
உயர்கின்ற நாடியது அசைவுமின்றிக்
கண்மையாய்க் காயமீதினிலே யேறிக்
கசக்கியே யிழிந்துமே வலித்துக் காணும்
பண்மையாய் பக்கத்தி லிசிவு முண்டாய்ப்
பாரித்துப் பணைக்கையுங் காலுங் கோணும்
வெண்மையாயுடம்பெங்கும் வியர்வை காணும்
மெலிவு பக்க வாதத்தின் விவரந்தானே

தானான கால்கோணிச் செத்தாற் போலத்
தாக்கான தரைதனிலே நடக்கொணாது
காணான கைகளொன்றும் பிடிகொடாது
கனமான உணர்ச்சியின்றி கைகள் சோரும்
மானான மயிர்கூச்சுந்திமிருண்டாகும்
வாய்தானுங் கோணியே தண்ணீர் விழும்
பேனான பித்தம் போலழன்று காணும்
பிரிவுபட்ச வாதத்தின் பெற்றியாமே''.

# பக்கவாதத்திற்கும் இளம்பிள்ளை வாதத்திற்கும் வர்ம முறைப்படி சிறப்பு மருத்துவம்

வர்மத்தினாலும் மற்றைய காரணங்களாலும் ஏற்படும் பக்க வாதத்திற்கும் இளம்பிள்ளை வாதத்திற்கும் வர்ம முறைப்படி மே நோக்கு, கீழ்நோக்கு, பக்க நோக்கு முறையில் உடலில் வ இடங்களில் காணும் முடிச்சுகளையும், செயலிழப்பையும், வலிக யும், நெறித்து, கழித்து மெதுவாகவும், அழுத்தமாகவும், த (Massage) மருத்துவம் செய்யலாம். உடலின் முன்பக்கத்திலு இடங்களான கும்பிடுகாலம், பொட்டு வர்மம், திலர்த கால தலைப்பாகக் காலம், நெம வர்மம், மந்திரக் காலம், கண்ண காலம், மூர்த்திக் காலம், நாசி வர்மம், காம்பூரிக் காலம், ஓ வர்மம், தாடிக் காலம், அண்ணாங் காலம், சங்குதிரிக் காலம், ச வர்மம், விலங்கு வர்மம். தும்மிக் காலம், சுமைக் காலம், தள்ள நடு குழி வர்மம், திவளை வர்மம், அனுமான் வர்மம். ஆனந் வாசுக்காலம், அடப்பக்காலம், கூட்டு வர்மம், அஸ்தி சுருச வர்மம், கதிர் வர்மம், உறுமிக்காலம், உதிரக் காலம், அமண் வர்மம், மூத்திரக்காலம், குத்து வர்மம், பதக்களை வர்மம், ஆ காலம், சிரட்டை வர்மம், மேல் முட்டு வர்மம், பக்க வர்மம், நா தலை வர்மம், குதிரை முக வர்மம், கொம்பேரி வர்மம், கு வர்மம், கரண்டை வர்மம், முடிச்சி வர்மம், கவளி வர்மம், விரல் மணிக்கன் வர்மம், குண்டு வர்மம் ஆகிய இடங்களில் மே நோக்கு, கீழ்நோக்கு பக்க நோக்கு முறையில் விரல்களால் மெ வாகவும் அழுத்தமாகவும், நெளித்து, சுழித்து தடவவும் பி பகுதியில் கொண்டைன் கொல்லி, சிறுங்கொல்லி, பிடரிக்காலம் மேல்கைப்பூட்டு வர்மம், வெல்லுறுமி தல்லுறுமி வர்மம், கச் வர்மம், வலம்புரி இடம்புரி வர்மம், இடுப்பு வர்மம், நாய் இரு வர்மம், கிளிமேக வர்மம், மணி முடிச்சி வர்மம், உப்பு கு வர்மம், குதிகால் வர்மம், உள்ளங்கால் வெள்ளை வர்மம், ப சக்கர வர்மம் ஆகிய வர்ம இடங்களில் காணும் முடிச்சுகளை வலிகளையும் செயல் இழப்பையும், மேல் நோக்கு, கீழ் நோக்கு நோக்கு முறையில் நெளித்து சுழித்து அழுத்தமாகவும் மெதுவாக வர்ம முறைப்படி தடவ (Massage) பக்கவாதம், முகவா இளம்பிள்ளை வாதம், வர்மம் முற்றிலும் குணமடையும் என்ப நிச்சயமாகக் கூறலாம்.

வர்ம சாஸ்திரம் குப்பையில் குன்றி மணி போல் இ கிடக்கிறது. அதன் பெருமையைத் தமிழர்களே உணரவில்லை பிறகல்லவா மற்றவர்கள் உணர்வார்கள். தமிழர்களின் ஆதர குறிப்பாக அரசாங்கத்தின் ஆதரவும் அறிஞர்களின் ஊக்குத இருந்தால் இந்த வித்தைக்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு. ந முன்னோர் விட்டுச் சென்ற இந்த செல்வத்தைப் பெட்டகத் பூட்டி வைத்து செல்லரிக்க விடாமல் காப்பது நமது கடன். த மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படும் என்றும் தமிழ் வைத்தி தன்னி[illegible] அடையும் என்றும் நம்புவோமாக.

நூலகம் ★ 600 008
143261
LC14:6
N88

23A
6-27